# ரணங்கள்



ரீ.எல்.ஜப்பார்கான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனசமூக நிலையம்
பாண்டிருப்பு 01, கல்முனை
பொது நூலகம்
பதிவு இல:
AM CCI 46
02-10-1948
130

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணங்கள்



மருதூர் சனசமூக நிலையம்
பொது நூலகம்
பதிவு இல:
AM/CC/46
02-10-1948
பாண்டிருப்பு-01, கல்முனை

ரீ.எல்.ஜவ்பர்கான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது

துவேஷத்தால் கொளுத்தப்பட்டு
ஷஹீதாகிப்போன
உதிரத்தின் சொந்தக்காரரான



என் தந்தைக்கு

**சமர்ப்பணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் நிறைந்த
# நன்றித் தூவல்கள்....

தினகரன்
வீரகேசரி
நான்காவது பரிமாணம்(கனடா)
எழுச்சிக்குரல்
அல்ஹஸனாத்
படி
மினா
திசை
உள்ளம்
தாமரை
சத்தியம்
பார்வை
மல்லிகை

செ.யோகராசா(எம்.ஏ)
மேமன்கவி
கலாரஞ்சனி+எம்.ஐ.எம்.ஸுபைர்
அருந்ததி
றுபைதா ஏ.எல்.எஸ்
ரவிச்சந்திரன்.இ
புனித செபத்தியார் அச்சகம்
எஸ்.எல்.எம் ஹனீபா
திரு.ஆர்.சிவகுருநாதன்
திரு.ஆ.சிவநேசச்செல்வன்
திரு.பொன்.ராஜகோபால்
திரு.வீ.ஜெகதீஸன்
ஜனாப்.ஏ.எச்.சித்தீக்காரியப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணங்கள்


- ரணங்கள் (புதுக்கவிதைகள்)
- ரீ. எல். ஜவ்பர்கான்
- முதல் பதிப்பு 1993.மே
- அட்டைப்படம் : அருந்ததி சபாநாதன்
- விலை : ரூபா 50/=
- அச்சகம் : புனித செபத்தியார் அச்சகம், மட்டக்களப்பு.
- லேசர் அச்சுக் கோர்ப்பு : சித்ரா கிரபிக் ஆர்ட்ஸ்,கொழும்பு.
- முகவரி : கவிதாலயம், 151,ஸாவியா வீதி, காத்தான்குடி 1.
  இலங்கை
- பதிப்பு : சத்தியம் பப்ளிகேஷன் காத்தான்குடி, இலங்கை.


- உரிமை : ஆசிரியருக்கு



- RANANGAL (THE MODERN POEM)
- T. L. JAWFERKHAN
- FIRST EDTION 1993. MAY
- COVEREDBY : ARUNTHATHI SABANATHAN
- PIRCE : 50/=Rs
- PRESS : ST.SEBASTIAN PRINTERS, BATTICALOA
- LASER TYPESET : CHITHRA GRAPHIC ARTS, COLOMBO 6.
- ADDRESS : KAVITHALAYAM, 151,ZAVIYA STREET,
  KATTANKUDY. 1. SHRI LANKA


- RIGHT : AUTHOR.


- PUBLISHED BY: SATHIYAM PUBLICATION, KATTANKUDY.
  SHRI LANKA




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயப்பட்ட தேசமும் ஜவ்பர்கானின் கவிதைகளும்

## செ.யோகராசா(எம்.ஏ)

தமிழ்ப் புதுக்கவிதை வரலாற்றில் எழுத்து காலகட்டமும், வானம்பாடி காலகட்டமும் குறிப்பிடத்தக்கன. வசனகவிதையைப் புதுக்கவிதை யாக்கியதும், படிமம் குறியீடு என்பனவற்றை அதற்குரிய இயல்புக ளாக்கியதும் 'எழுத்து' குறிப்பாக வாழ்க்கையின் பலவேறு நிலைகள் பற்றி தீவிரதன்மையுடன் 'எழுத்து' கவிதைகள் படைத்தபோது 'வா னம் பாடியோ' சமூக, அரசியல்விமர்சனங்களுக்கு அழுத்தம் கொடுத் தது. அவற்றை வித்தியாசமான கற்பனைகள், வருணனைகள், சொல் லாட்சிகள் என்பனவற்றுடன் வெளிப்படுத்தியது. இவற்றால் புதுக்க விதை சனநாயகப்படுத்தப்படலாயிற்று. இவ்விதத்தில் நா.காமராசன், மீரா, மேத்தாவின் 'பலம்' காலப் போக்கில் அதிகரித்துவந்தது. புதுக் கவிதைகள் எழுதிக்குவித்த மேத்தாவின் முயற்சி புதுக்கவிதை வியா பாரச் சஞ்சிகைகளில் வெளிவரத் தொடங்கியது. விரைவில் அது சனரஞ்சகப் பொருளாயிற்று. இவ்வாறு ஆரோக்கிய மற்ற நிலைக்கு புதுக்கவிதையை இட்டுச் சென்றதில் மேத்தாவுக்கு (பின்னர் வைரமுத் துவும்) முக்கிய பங்குண்டு. புதுக்கவிதை எழுவது இலகுவான தென் ற(தவறான) அபிப்பிராயத்தை முன்னரைவிட ஆழமாக வேரூன்றச் செய்ய, இவர்களால் முடிந்தது. இதன் அதிர்வுகள் ஈழத்திலும் பாதிப்பை ஏற்படுத்தின. தமிழகத்திலும், ஈழத்திலுமுள்ள இளந்தலை முறைக்கவிஞர் பலரும் இவர்களது கடாட்சம் பெற்றவர்களாவர். கவிஞர் ஜவ்பர்கானும் இதற்கு விதிவிலக்கானவரல்லர். வெளிப் பாட்டு ரீதியில் இத்தொகுதியிலுள்ள புதுக்கவிதைகள் பலவும் மேத்தா. வைரமுத்து ஆகியோரின் பாதிப்புக்குட் பட்டனவே. எமது இலக்கியச் சூழலில் இத்தகைய நிலை ஏற்படுவது தவிர்க்க இயலாதது என்றே கருதுகின்றேன்.

அதே வேளையில் ஈழத்தில் வெளியான ஏனைய புதுக் கவிதைத் தொகுப்புகளுடன் ஒப்பிடும் போது இத்தொகுப்பு சிற்சில விதங்களில் குறிப்பிட்டுக் கூறத்தக்க சில பண்புகளைப் பெற்றுள்ளமையை என் னால் அவதானிக்க முடிகின்றது.

நவீன தமிழ்க் கவிதைப் போக்கில் பாரதி ஆரம்பித்த மாற்றங்களு ளொன்று உலகளாவியப் பார்வை என்பது. இப்பண்பு பாரதிக்குப் பின் வந்த கவிஞர்களிடமும் தொற்றிக் கொண்டது குறைவு. இவ்விதத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானம்பாடிக் கவிஞர்கள் ஓரளவு விதிவிலக்காக விளங்கினர். வியட்னாம், கிழக்கு வங்கம், சிலி, இரசியா, சீனம் என்பன இவர்களது பார்வைக்குட்பட்டன. புவியரசு, அக்கினிப்புத்திரன், ரவீந்திரன் முதலானோர் இவ்விடத்தில் நினைவுக்கு வருகின்றனர். இவர்களுக்குரிய அரசியல், தத்துவப் பின்புலம் ஈழத்துக் கவிஞர்களுக்கு இல்லாவிடினும் ஈழத்துக்கவிஞர் சிலர் உலகளாவியப்பார்வை பெற்றிருந்தனர். ஜவ்பார்கானிடமும் இப்பண்பு நிறைய உள்ளது. இத்தொகுப்பிலுள்ள கவிதைகளில் சில எத்தியோப்பியப்புரட்சி, ஆப்கானிய எழுச்சி, லெபனான் படுகொலை, காஸ்மீர் படுகொலை, லொஸ் ஏஞ்சல்ஸ் நிறவெறி என்பனபற்றி அமைந்துள்ளன. இப்பண்பு பெற்றுள்ள ஈழத்தின் முதற்கவிதைத் தொகுதி இது வென்றே கருதுகின்றேன்.
இதுமட்டுமன்றி, இஸ்லாம் சமய ரீதியிலான கவிதைகளிலும் கூட மரபுக்குரல்கள் மட்டுமன்றி ஓரளவு புரட்சிகுரல் ஒலிப்பதையும் காண முடிகின்றது. 'பழைய பல்லவிகள்' இதற்கு சிறந்த எடுத்துக் காட்டு இல்லையா?
மேற்கூறிய உள்ளடக்கத்தில் மட்டுமன்றி வெளிப்பாடு முறையிலும் கூட இத்தொகுப்பிலுள்ள கவிதைகளில் குறிப்பிடத்தக்க சில பண்புகள் காணப்படுகின்றன. இவற்றுளொன்று சரமாரியாகவும், அநாயாசமாகவும் புதிய புதிய உவமைகள் அமைவது.

''தேடித்தேடி
கண்டுபிடிக்க முடியாமல் போய்விட்ட
சோப்ராஜைப்போலநிம்மதி.....
சுற்றிவளைத்து
கைது செய்யப்படவேண்டிய
பூலான்தேவியைப்போல
அமைதி'' ........(சுதந்திரதேடல்)
''அக்கினி என்ன
சத்யே சித்ரேயா
ரசித்துக் கொண்டிருக்க''......(கறுப்புப்புகை)

இவ்வாறே புதியதும் பழையதுமாக பல படிமங்களும் காணக்கிடைக்கின்றன......
இவைமட்டுமல்ல புதிய சொற்கள், சொற்றொடர் பிரயோகங்களை அறிமுகப்படுத்துவதிலும் கவிஞர் ஈடுபாடு கொண்டுள்ளார். (எடுத்துக்காட்டு: மனுஷம்செய்); வடமொழி - தற்பவ சொற்கள் அதிகம் இடம்பெறுகின்றன (அட்டகாஷம், வஸந்தம், வேஷம், நிஷப்தம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புஷ்பம், ரகஷ்யம், ஸப்தம்,சூர்யன், ராத்ரீ) ஆங்கிலச் சொற்களும் ஆங்காங்கே தலை நீட்டுகின்றன. (குறூப், பவர், இனிஷல்)

ஆயினும் வெளிப்பாடுரீதியிலான மேற்கூறிய பண்புகள் சிலவற்றை ஆழ்ந்து நோக்கும் போது கூடவே அவற்றோடு குறைபாடுகள் சில பின்னிப் பிணைந்துள்ளமை புலப்படுகின்றது. உவமைகள் நிரைநிரை யாகப் புறப்படும்போது, அவை சிற்சில இடங்களில் பொருத்தப்பாடு குறைந்தனவாகவுள்ளன:

''இரவு நாட்டின்
நகரங்களெல்லாம்
நரகங்கள் தான்....
புறக்கோட்டையின்
புகையிரத நிலையம்போல்.....'' (ராத்ரீ)

படிமங்கள் சில இடங்களில் தெளிவின்றி அமைந்து விடுகின்றன.

''நீ
விரல்களால் விண்ணைத்தொடு
வீற்றோ அங்கே
வீழ்ந்து போகும்.....'' (அஹிம்ஸைராம்ஜம்)

ஒரே மாதிரியான படிமங்கள் அடிக்கடி வந்து செல்கின்றன. (விடிய லின் விலாசம், வரலாற்றுமுகவரி, சத்தியவிலாசம்) புதிய சொற்றொ டர்கள் பொருத்த மற்றுள்ளன (அஹிம்ஷித்தல், துரோகிக்கவில்லை, நிம்மதித்து) சில இடங்களில் வடமொழி எழுத்துக்கள் அநாவசியமா னவையாகக் காணப்படுகின்றன (தேஸம், நேஷித்தல்).

குறுங்கவிதைகளில் காணப்படும் ஆழமும், கூர்மையும், செறிவும் போதா தென்றும் எண்ணுகின்றேன். ஆழ்ந்து வாசிக்கும் போது சில கவிதைகளில் கருத்தொருமைப்பாடு முறண்படுவதனை கவனிக்க முடிகின்றது. 'புதிய வேதம்' என்ற கவிதை இவ்வாறு முடிகின்றது.

''ஓடுகின்ற பஸ்ஸிற்குள்
ஒற்றுமையைக் காட்டும்
பொட்டுகளும், தொப்பிகளும்
நிறவாழ்க்கையில்......?''

ஓடுகின்ற பஸ்ஸூம் நிஜவாழ்க்கையின் ஒரு அங்கம் அல்லவா? அவ்வாறெனில் முரண்பாடொன்று ஏற்பட வில்லையா?

எவ்வாறாயினும் சிறந்த கவிதா ஆற்றல் கவிஞரிடமுண் டென்பதில் சற்றும் ஐயமில்லை

''விடிவெள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை பெற்றலும்
புளியம் விதைகளை
பொறுக்குவது வழமை.....
இரவு
விடியலைத் தொட்டவுடன்
வெற்று ரவைகளைப் பொறுக்குகிறான்
என் தம்பி.....(சின்னப்பருவங்கள்....)

என்றும்

''ஒரு தேவார முகத்திற்கு
திருமறையின் மார்புகள்
திரவிய மிடுகின்றன...''(புதிய வேதம்)

என்றும் பாடும்போது அத்தகைய ஆற்றல் வெளிப்படுவதனைக் காண்கின்றோம். இவ்வாற்றல் செழுமை பெறுவதற்கு இரு விடயங்களில் கவனஞ் செலுத்துவது அவசியமென்று கருதுகின்றேன். ஒன்று மேத்தா, வைரமுத்து போன்றோரின் ஆதிக்க எல்லையிலிருந்து விடுபடுதல். (இவ்வாறு விடுபடத் தொடங்கியதன் ஆரம்பத்தினை உணர்த்துகின்றனவாக உள்ளன ''வெளுக்கான வானமும்......'' ''மௌனித்த அக்கினியும் மரணித்த நேஷமும்; அணுபீச்சிய காலக் குஞ்சு'' முதலான சில கவிதைகளில்) மற்றொன்று தனக்குள் தன்கவிதைகளை சுயவிமர்சனம் செய்து கொள்ளல் இந்நிலை ஏற்படும் போது ஆற்றல் மிக்க கவிஞன் ஒருவனை ஈழத்துக் கவிதையுலகு கண்டு கொள்ளும், என்றும் நம்புகின்றேன்; வாழ்த்துகின்றேன்.

செ.யோகராசா, எம்.ஏ

மொழித்துறை,
கிழக்குப்பல்கலைக்கழகம்,
மட்டக்களப்பு. 1993-01-05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ரணங்களும ஐவ்பர்கானின் கவிதைகளும்

## மேமன்கவி

கலை, இலக்கியம் என்பதெலாம் கற்பனாலோகத்தின் அடிப்படையாகக் கொண்டோ, இலட்சிய கோஷத்தை உள்ளடக்கமாக்கிக் கொண்டோ, படைக்கப்பட்ட காலம் இன்று காலாவதியாகி விட்டது. இன்று தேசீய சர்வதேசீய சமூக மட்டத்தில் எழுந்த அக - புற முரண்பாடுகள் - பிரச்சினைகள் ஏற்படுத்தும் தாக்கங்கள். கலைஞன் வாழும் சூழலுக்கே அராஜகத்தையும் - மனுகுல அழிவையும் கொண்டுவர வளர்ச்சி அடைந்து வரும் வெகுசன ஊடகங்களின் மூலமாகன 'உலகமே ஒரு கிராமமாக' மாறிவிட்ட சூழலில், மனுஷகுலம் பரஸ்பர நிலையில் தமது சோகங்களைப் பரிவர்த்தனை செய்து கொண்டிருக்கிறது. அத்தகைய சூழ்நிலையில வாழும் ஒவ்வொரு கலைஞனால் படைக்கப்படும் 'சிருஷ்டிகள்' சுய அனுபவ வெளிப்பாடுகளாகவே வெறிப்படுவது நிதர்னமாகிவிட்டது.

இதன் காரணமாக, ஒரு பொதுமையான குரல் நவீன கால, இன்றைய படைப்புகளில் ஒலிப்பதை நாம் காணலாம்.

சுய அனுபவ வெளிப்பாடுகள் என்று நாம் தனித்து பிரித்துக் காட்டினாலும், இன்றைய கலைஞன் - தான் உள்வாங்கும் அனுபவங்களின் பொதுத்தன்மையின் காரணமாக, குறிப்பாக ஒவ்வொரு கலைஞனும் ஒரு சமூக பிரஜை என்ற முறையில் அவனது இருப்பியல் மீதான அராஜகத்தின் கொடூர கரங்கள் ஏற்படுத்தும் 'ரணங்கள்' தரும் வலியின் காரணமாக இன்றைய கலையாகத்தில் ஒரு பொதுமையான தொனி ஒலிப்பதை நாம் அனுபவிக்க முடிகிறது.

அத்தொனியின் அடிநாதமாக இருப்பது மனுகுல அழிவும், அந்த அழிவு ஏற்படுத்துகின்ற சோகமும் அவலமும் தான.

இதன் காரணமாகதான் என்னவோ. பாரம்பரியமாக நிலை, இலக்கியங்களுக்காக பேணப்பட்டு வந்த மரபுகள் தகர்த் தெறியப்பட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கத்தில் எவ்வாறு ஒரு பொது தொனி பரிணாமம் பெற்றதோ, அவ்வாறே, உருவ வெளிப்பாட்டிலும், பொது பண்புகளை, இன்றைய உலகளாவிய கலை, இலக்கியங்களில் காண முடிகின்றது. ஏனெனில் அவலமும் - சோகமும் எந்தவொரு இலக்கண வரம்பினை மனங்கொண்டு வெளிவர முடியாதோ, அதே போன்று, அத்தன்மைகளை அடிநாதமாகக் கொண்டு எழுகின்ற கலை, இலக்கியச் சிருஷ்டிகளும் இலக்கண வரம்புகளை உடைத்து பிரவாகிக்கின்றன. இதனால் தான் இன்றைய கலை, இலக்கிய படைப்புகள் படைக்கும் பௌதீக சூழல் வேறுபட்டாலும். அப்படைப்புகளின் உள்நிலையாகயிருக்கும் தொனி, ஒரு சமாந்தர உணர்ச்சி தளத்தில் அப்படைப்புகளை இணைத்து விடுகின்றது.

மேற்கூறிய கூற்றுகள் நண்பர் ரீ.எல்.ஜவ்பர்கான் அவர்களின் ''ரணங்கள்'' எனும் இத்தொகுதிக்கான கவிதைகளுக்கும் பொருந்தும் எனலாம்.

காத்தான்குடி கிராமத்தில் தனது வாழ்வின் வேர்களை பதித்து கொண்ட கவிதை ஆர்வமிக்க ஓர் இளைஞனான ஜவ்பர்கான்.

இக்கவிதைகள் மூலம் தன் சுய அனுபவங்களினுடாக தான் சார்ந்திருக்கும் சமூகத்தையும் (ஏன் தன் வீட்டையும் கூட) அரிந்து கொண்ட - அரித்து கொண்டிருக்கும். எரிவுமிக்க, அழிவுமிக்க பிரச்சினைகள் கவிதையாக்கம் செய்ததோடு, அப்பிரச்சினைகள் தந்த சோகங்களினூடாக, வங்காள தேசம் முதற் கொண்டு எத்தியோப்பிய தேசம் வரையிலான மனிதகுல சோகங்களையும் பரிவர்த்தனை செய்துயுள்ளார்.

இதற்கு மேலாக, அராஜகமிக்க நிகழ்வுகளால் சமூக மட்டத்திலும், தனிமனித மட்டத்திலும், பல இழப்புகளை சந்தித்துக் கொண்டாலும், நண்பர் ஜவ்பர்கான் தனது கவிதா இதயத்தை எந்தவொரு சார்பு நிலைக்கும் சாய்க்காது, தேசிய - சர்வதேசீய ஒருமைபாட்டு உணர்வுடன், தான் சந்தித்த சகல மட்ட சோகங்களையும் கவிதைகளில் இணைத்துப்பார்த்துள்ளார். இதன் மூலம் அராஜக சக்திகள், ஒரு குறிப்பிட்ட சாதியினையோ, மதத்தினையோ, இனத்தினையோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசத்தினையோ கொண்டவை அல்ல என்ற உண்மையினை நண்பர் ஆழமாக உணர்ந்துயிருப்பதாக எனக்கு படுகின்றது. இத்தன்மையே இவரது கவிதைகளுடனான நமது ஈடுபாட்டுக்கு காரணமாகிறது.

நமது இக்கூற்றை நிருபிக்கும் வகையில், இத்தொகுதியில் பல கவிதை களைக் காணலாம்.

உ+ம் : 'புதிய வேதம்' எனும் கவிதையில்
''மதவெறி
மலடாகி.....
சமத்துவம்
சப்தித்துக் கொள்கிறது'' எனத் தொடங்கி

''எட்டாம் வீட்டை
எட்டிப் பார்க்கிறேன்
பாக்கியத்தின் குழந்தைக்கு
பாலூட்டிக் கொண்டிருக்கிறாள்
பாத்திமா உம்மா......
ஒரு திருமறையின் மார்புகள்
தேவார முகத்திற்கு
திரவியமிடுகின்றன.........''

என்ற வரிகள் தேசீய ஒருமை பாட்டின் ஊற்று இன்னும் பற்றிவிட வில்லை என்பதனை ஜவ்பர்கான் போன்ற இளைஞர்களின் பேனாக் கள் ஆதாரம் கூறுகின்றன.

இன்றைய இளைஞர்களில் பலர் காதலிப்பதற்காகவே கவிதை (?) (அதுவும் புதுக்கவிதையாம்) எழுதிக் கொண்டிருக்க ஜவ்பர்கான் போன்றோர் காதலையும் கூட இன்றைய பிரச்சனைகளின் காரணமாக நிராகரிப்பதை காதல் சம்பந்தமான ஒரு கவிதையில் இப்படி கூறுகி றார்.

''கிழிந்து கிடக்கின்ற
இந்த தேசத் தெருக்களைப்போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் இதயமுமல்லவா
அழிந்துக் கிடக்கிறது
அப்புறம் என்னடி காதல்?''

என காதலை பிரச்சினைகளை முன்னிட்டு பின் தள்ளுகிறார். 'அணு பீச்சிய காலக்குஞ்சு' எனும் தலைப்பிலான கவிதையில்.

''காலத்தைத் திறந்து பார்க்கிறேன்
முள்ளுக்கு மேல்
மனிதம் படுக்கிறது........''

என கூறும் பொழுது - இன்று மனிதன் படும் அவலத்தை சொல்லுகிறார்.

ரணங்கள் எனும் இத்தொகுதியின் மூலம் 80க்கு பின்னாலான இலங்கை தமிழ்க் கவிதைக்குரிய தனித்துவ வீச்சுகளில் தனது பங்களிப்பைச் செலுத்துவதோடு, இன்று இலங்கையில் நசுக்கப்பட்டுள்ள தேசீய ஒருமை பாட்டினை (இன்னும் சாகவில்லை) கலை, இலக்கியவாதிகளால் உயிர்ப்பிக்க முடியும் எனும் நம்பிக்கையும் நண்பர் ஜவ்பர்கான் எமக்குள் விதைக்கிறார்.

அவருக்கு எமது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

55B/3ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11
15-2-93

மேமன்கவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணங்களாகிப்போன என் கவிதைகள்!

தொகுதிபோடுவது கருவாடு போடுவது மாதிரி எனக்கூறிக் கொண்டே தனது கவிதைகளை மீனாகவும், தொகுதியை கருவாடாக வும் எண்ணி கவிதைத் தொகுதிகள் போடும் ''கவிஞர்'' களுக்கு முன் நான் கவிதைத் தொகுதி(கவிதைத் தொகுதிஎன்பதில் அழுத்தம் கொள்கின்றேன்) போடுகிறேன்.

கவிஞனை கற்பனை உருவாக்குகிறது என்றவாதம் காலவதியாகி விட்டகால கட்டத்தில் ஜனனித்தது தான் என்பேனா. உணர்வுகளின் உந்துதலில் உற்பத்தியாகுபவனே உண்மையான படைப்பாளி இவன் அந்த வகையைச் சார்ந்தான்.

எண்பதுகளின் நடு - கடைசிப்பகுதிகள் தொண்ணூறுகளின் தொடக் கம் அவலங்களையும், அநியாயங்களையும், கொடூரங்களையும், கொடுமைகளையும் தூக்கிக் கொண்டு நின்ற காலம். அந்தப் பொழுது களில் என்னையும் மீறிக் கொண்டு பீறிட்டு எழுந்த உணர்வுகளின் கிறுக்கல்கள் தான் ''ரணங்களின்'' வருகை.

சிலரைக் கவிதை எழுதத்தூண்டியது காதலிகளின் கண்களாக இருக்க லாம். இவனை எழுத வைத்தது மனித அழிவுகளின் அவலங்கள், தேசத்தின் எரிவின் புகைகள், தெருக்களின் மூலை, முடுக்குகள் கூட சவச்சாலைகளான போது என்பேனா கவிதா ரத்தம் சிந்தியது அது தான்! ரணங்களின்' ஆறல்.

ஆரோக்கிய மற்ற அழிளிவுகளின் முன் என்பேனா மட்டுமல்ல இந்த மனசும் தான் ரணமானது. அந்த அவலங்களின் படப்பிடிப்புத்தான் என்னையும் மற்றவர்கள் 'கவிஞன்' என்று சொல்ல வைத்த சுகந்தி நிகழ்வு. துப்பாக்கிகளின் தும்மல், அப்பாவிகளின் அழிவு - முடமா கிப் போன சிந்தனைகள் - இத்யாதிகளை ஜீரணிக்க முடியாத என் பேனா எழுதியது - அதுதான் கொஞ்சத்தை உமிநீக்கிப்புடைத் தெடுத்து உங்கள் முன் ரணங்களாக....

அன்புடன்
ரீ. எல்.ஜவ்பர்கான்

கவிதாலயம்
151 ஸாவியாவீதி,
காத்தான் குடி - 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனித்த அக்னியும் மரணித்த நேசமும்....

**ம**த்திய கிழக்கின்
மணல் வெளிகளைப்போல்
வறண்டு போய்விட்ட
சுடுகின்ற இதயங்களோடு
வானத்தைப்பார்த்து பார்த்து
வஸந்தத் தைக்காணாமல்
இலவுக்கிளிகளாய்
ஏமாந்து போன
சோகவிழிகளுடன்....

நீண்டதூரப் பயணத்தில்
பாதங்களைக் காயப்படுத்தி
துயரங்களையும் துவேஷங்களையும்
சுமந்து கொண்டு
காலத்திற்குமுன்
வாழ்க்கையையே காலமாக்கி
சந்தர்ப்ப சர்ப்பங்களிடம்
சருகாகிப் போன மனசுகள்.....

அன்பைப்பருக வேண்டிய
அனுபவப்பாதைகளில்
முரட்டு வாதங்கள் போட்ட
முள்வேலிகளுக்குப் பின்னால்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்னித் துண்டுகளை
அணைத்துக் கொண்டு
மெழுகுதிரிகளென மாறிப்போகும்
பாலர் பருவங்கள்.....

வெடித்துப்போன மனசுகள்
வெந்துபோன உடல்கள்
சுதந்திரமும், உரிமையும்
சுட்டுக் கொல்லப்பட்டு
அனாதையாகிப் போன
சனநாயகராஜ்யத்தின்
பேரப்பிள்ளைகளாக
இந்தமானுடங்கள்.....

நெருப்புத்துண்டங்களும்
நேஷம் தொலைத்த
நெடுந்தூரப் பகைமைகளும்
இந்தமனங்களுக்கு
தினமும்
ஹீரோஸிமாக்களையும்
காத்தான்குடி பள்ளிகளையும்
அறிமுகப்படுத்துகின்றன......

920614



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாண

நெஞ்சில் நெருப்பையும்
கண்ணில் காயத்தையும்
கிழட்டுமுதுகுக்கு மேல்
முட்டுக்கால் போடும்,
சால்வைகளைப் போல
நிர்வானமாக்கிக் கொண்டு
காலத்தறிச்சத்தம்
பூஜ்யமாய் புதிர்நெய்கிறது...

ரணங்கள்

சோற்றைத் தின்றுதின்று
அலுத்துப்போன
நாக்கைப்போல
சோகத்தை சுவாசித்து சுவாசித்து
எண்ணங்களும்
வியர்த்துப் போயின.....

கடவுள்
உலகுக்குச் செய்தபிழை
எங்களுக்கும்
இதயம் வைத்தது....
மனசில்லாமலேயே
நன்றியைப் பிரசவிக்கின்ற
நாய்களுக்கு உள்ளமிருந்தால்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானமே!
உனக்குக் கூட
சுதந்திர கிரீடங்கள்
சூட்டப்படுகின்றன
மார்கழித் தேஸத்திற்கு
மன்னரே நீ தானே

ஆடம்பரங்களைமட்டும்
இறக்குமதி செய்து
இலாபம் தேடும் ஜனாநாயகமே....
அடுத்த 'பட்ஜட்டில்'டில்
நிம்மதியை இறக்குமதி செய்ய
நிதிஒதுக்கு!

ரணங்களை
ரசித்து ரசித்தல்லவா
மலடாகிப் போகிறது
மனிதம்......!
911215





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ அமெரிக்க - லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் வெடித்த நிற மோதல்களின்போது எரிந்த நகரை நினைந்து.....1992

**க**
**று**
**ப்**
**பு**
**ப்**
**பு**
**கை**

**வ**னப்பை
வரலாறாய்சூடிக் கொண்ட
லொஸ்ஏஞ்செல்ஸே.....
உனக்கு
கொள்ளிவைக்கப்பட்டபோது
மனிதாபிமானம்
பக்தாதாய் நொருங்கிப்போனது...

அக்னிஎன்ன
சத்யேசித்ரேயா
ரசித்துக் கொண்டிருக்க...
திமிங்கிலத்தைப் போல்
தின்னப்பழகிய நெருப்புக்கு
இயற்கைகூட எதிரிதான்.....!

நீஷ்டூரத்தைப் பொசுக்க
பாடையாகிப்போன
மண்டேலா இனமே.....
உங்கள் உறுதிக்குமுன்
எல்லோரும் போத்தாக்கள் தான்...!
லொஸ் ஏஞ்செல்ஸ்முகத்தில்
அசிட் ஊற்றிவிட்ட
புரட்சிக்கரங்களே...
கர்வத்தோடு ஓடிக் கொண்டிருந்த
காட்டுச் சிங்கத்திற்கு
பயத்தை அறிமுகப்படுத்தினீர்களே....
உங்களிடம்
பூமியைப் உருட்டக்கூடிய
புத்தியிஷமுண்டு....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள்
உரிமைக்காக உருக்குலைந்தவர்கள்...
வின்னியை
வீதியில் விட்டுவிட்டு
பதினெட்டாயிரம் நாட்கள்
சிறைக்கம்பிகளுடன்
சிநேகம் கொண்டவனே
மண்டேலா...

வன்செயலை
உற்பத்தியாக்கும் வாசலியே...
நிறங்கள் மோதிக் கொண்டன
கறுப்பும் வெள்ளையுமாக!
போபாலாய் பொங்கி வந்த
தீக்கந்தைகளிலிருந்து
தீபமாய் வந்தது
வெறும்புகைகளல்ல
கறுப்புத்தோல்களில்
இருந்து வழிந்த
உணர்ச்சி ரத்தங்கள்!
910428



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ஆப்கானிய இஸ்லாமிய எழுச்சியின் போது - என்பேனா அசத்தியத்தைச் சாடியது சத்தியத்தைப் பாடியது!

# இரண்டாவது வியட்நாம்!

**ஆ**ப்கான்
ஈமானிய எவரெஸ்டின்
இருப்பிடம்..

கலிமாவின் கழுத்துக்கு
கம்யூனிஸக்கரங்கள்
கத்திதீட்டிய போது...
''லாயிலாஹா இல்லல்லாஹு...''
மினாராவிலிருந்தல்ல
ஹிக்மத்தியாரின்
ஹிருதயத்திலிருந்து கசிந்தது!

அமேரிக்கக் கூலிகளுக்கு
அடி கொடுத்த
வியட்னாமியத் தேஸத்து
ஹோசிமினைப் போல்
சோவியத் டாங்கிகளை
சுட்டுப் பொசுக்கிய
ஆப்கானிய ஹிக்மத்தியார்
வல்லரசையே விரட்டியடித்தவர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது
உலகம் ஜெபத்தை ஜெபிக்கிறது!
ஆனால்
துஆக்களுக்கு தொட்டில் போடுகிறது'

உலகம்
ஈமானிஸத்தைத்தான்
இரும்பாக்குகிறது...

ரஷ்ய சாம்ராஜ்யத்தின்
ரவுடிக்கறடிகள்
எங்கள்
முஜாஹித் ரத்தங்களை
முகர்ந்த போது

மனம் இருக்கவில்லை...
மதம் இருந்தது!
சிவப்பாயிருக்கவில்லை
சிலிப்பாயிருந்தது!

ஹிக்மத்யார்!
நீங்கள்
கருவுக்குள்ளேயே
கலிமாப்பால் குடித்திருக்கின்றீர்கள்
அதனால் தான்
தெருவுக்கு வந்தபோது
தேகம் இஸ்லாமாயிருக்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே
ஹிக்மத்யார்களும்
ரப்பானிகளும்
மசூத்களும்
முஜாதிதிகளும்
புதிய கலிபாக்களாக...


முஜா ஹிக்கனே!
நீங்கள் உள்வாங்கிய
ஈமானிய மூச்சில்
நஜீபுல்லாஹ்வின்
நாளமே அறுந்தது...
அந்த அற்புத மூச்சு
வெளிவரும் போது
இஸ்ரேல் அங்கே
இடிந்து கிடக்கும்
920818



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நி**கழ்காலத் தொட்டிலின்
**ம** நித்ரா சிசுக்களாக
கல்லறைச் சுவர்களையே
**ர** கருவறை மெத்தைகளாக்கி..
சூன்யப்பட்டுப்போன
**ண** ஜட வாழ்க்கையில்

**உ** மௌனமாய் சிரித்து
முகாரியாய் பாடி..
**யி** அச்சத்தால் நிம்மதித்து
மரணத்தால் உயிர்த்து
**ர்** பகல்களால் தூங்கி
பாடைகளால் எழுந்து
**ப்** மனசுகளின் இடுக்குகளில்
மயானக் கவ்வல்களாக...
**பு**
சாவுமட்டும் தான்
தினமும் நடக்கிறது
வானொலிச் செய்தி அறிக்கைமாதிரி...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றுக்கு கடிதம் எழுதி
சாம்பராகிப்போன எங்கள்
சத்தியத் தெருவிற்கு
வீசச் சொல்வோம்...
அஸத்தியக் கூரைகளில்
அஸ்தியாய் விழ...

நிலாக்காலமும் அமாவாசைதான்
ஏகாதிபத்யத்தின்முன்
எல்லாமே இருள் தானே!

சமாதானம், அமைதி
பேச்சவார்த்தை, தீர்வு
உடன்படிக்கை, குழுக்கள்...
நிற்கமறுக்கும் நிலவுபோல

எங்கள் விரல்களே
கண்களைக்குத்தி
காயப்படுத்தும் போது..
இமைகள் ஒன்றும்
துரோகிக்கவில்லை!

நாங்களும் சிரிக்கின்றோம்
அழுகையின் பீலிக்குள் நின்று!
920528



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஹிம்ஸை ராஜ்யம்!

**எ**ழும்பு!
நட
துப்பாக்கி இல்லாத
தேஸமொன்றிற்கு!

மனுஷம் செய்
இரத்தம் பீறிடாத
இதயம் வைத்து...

வா
நானும் வருகிறேன்
அணுகுண்டைத் தாங்காத
ராஜ்யமில்லாத
ராஜ்யமொன்றிற்கு...

விழிகள் செய்!
அடிஸ் அபாபாவின்
பசியையும்
டாக்காவின்
வெள்ளத்தையும்
ஜெரூஸலத்தின்
அகதிமுகாம்களையும்
ஈழத்தின்
இனமரணங்களையும்
பார்க்காத விழிகள் செய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ
விரல்களால் விண்ணைத்தொடு
அப்போது
வீற்றோ அங்கே
வீழ்ந்து போகும்!

நானும் நடக்கிறேன்
சமாதானத்திற்காக அல்ல
சண்டையை உருவாக்க
அப்போது தானே
அமேரிக்காவின்
ஆயுதம் விற்கும்

சிந்திக்காதே!
காலம் சிந்திப்பவர்களைப்பார்த்து
சிரிக்கிறது...
நீயும்
அராஜகம் செய்
சமூகம் உன்னை
ஆராதனை செய்யும்!
என்ன மனிதர்கள்
நன்றி மழையில்
இவர்கள்
நனையவேயில்லை.....
அதனால் தான்
நெஞ்சு கூட வறண்டு விட்டது
நீண்ட பாலை மாதிரி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு வேண்டாம்
இந்த ராஜியம்
இப்படித்தான்
இப்படியேதான்
நாமொரு
புதிய ராஜியத்தைப் புனைவோம்
படையில்லை
பந்தோபஸ்தில்லை
ஆயுதம், அணுகுண்டு
இத்யாதிகள் இல்லாத
இன்னொரு
ராஜ்யம் செய்வோம்...

முடியாவிட்டால்
முகங்களுக்கு
முக்காடு போடுவோம்...
நடப்போம்
துப்பாக்கியில்லாத
தேசம் ஒன்றிற்கு!
911110





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதத்தேடலில்...

மனித்ததேடலில்
காணத்துப்போன
எத்தனை முகங்கள்....!

பிஞ்சுகளாய்
பெரிசுகளாய்
வஞ்சிகளாய்
வாலிபராய்...
இப்படி
முகவரிகளை முடமாக்கிக் கொண்ட
எத்தனை மடல்கள்!

நிலவுக்கு உயிரில்லைதான்
ஆனால் நினை விருக்கிறது
கேளுங்கள் சொல்லும்!

மனிதத்தேடலில்
காணத்துப்போன
எத்தனை முகங்கள்....
900316



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✱ எயிட்ஸ் உறுஞ்சிய தந்தைக்குப் பிறந்த தனயனைக்கண்டு....

# உனக்குமா சிலுவை?

பாவம் இந்தப்பாலகன்
சோக வரலாறொன்றின்
சொந்தக்காரன்!

எத்தியோப்பிய வானில்
பிரசவமாகாத
பிஞ்சு நிலாவே....
எங்கள் ஆத்மாக்கள்
அழுது கொள்கின்றன
உன் உருவைப் பார்த்து

சாதனைகளைப்படைத்து
சாக்குகளில் அடைக்கும்
விஞ்ஞானத்தின்
கருப்பை கருவாடாய்ப் போனதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகாலம் போல்தான்
உன் சங்கதியுமிருக்கிறது
குற்றவாளிகள் - நிரபராதிகள்
நிரபராதிகள் - குற்றவாளிகள்
இப்படித்தான்
இந்த உலகம்
இதயங்களை இனங்காட்டுகிறது!

நீயும்
ஒரு சமயுகம்தான்
உன் தந்தை தானே
பாவத்தின் கதாநாயகன்...
அப்படியிருக்க
நாளை - உன்னை ஏன்
மரணச்சிலுவையில்
அறையப் போகிறார்கள்...

...........
891231



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிஸப்த இரைச்சல்

நீண்ட இருக்கையில்
விறைத்துப் போய்விட்ட
சின்னப்பாதங்கள்
வெடித்துச்சிதறி
வெந்து போகையில்கூட
எழுந்துவெளியே வர
ஆயுத இரைச்சல்களின்
ஆன்மா கசியவில்லை!

பூட்டப்பட்ட
கதவுகளுக்குள்ளால்
காற்று புகுந்து கொள்ள
கஷ்டப்படுகிறது.....
ஆனால் - எங்கோ வெடித்த
ஏ.கே.ரவைகள்,
ஓடுகளை உடைத்து வந்து
உட்கார்கிறது...

காலமே!
மனித இரைச்சலுக்குமுன்
நிஸப்தத்தைத்தேடி
விழிகளைமூடிக் கொண்ட
வினாடிகள் எங்கே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலரும், தென்றலும்
எத்தனை நாளைக்குத்தான்
மல்லுக்கட்டிக் கொள்வது?
சப்த காலமே!
சண்டையை சாகடித்துவிடு!.....
எங்களுக்குள் நாங்கள்
இரைச்சலிட்டுக் கொள்கிறோம்
இறந்து போகாமல்....

காலமே!
நீ கொஞ்சம் உருமாறு...
மழைக்குப் பதிலாக
மனிதாபிமானத்தை...
காற்றுக்குப் பதிலாக
கடுவுறவுப்பாலத்தை
நீஷ்டூரத்திற்குப்பதிலாக
நியாயத்தனத்தை
உற்பத்தி செய்துபார்.....
920531



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடக்குமுறை

இருட்டுக்கு
இருப்பிடம் கொடுத்ததால்
நித்திரை செய்கிறது
வெளிச்சம்!

900215



## கொலை!

துப்பாக்கிக் குடிகாறன்
துப்பினான்.........
................!
920207

## ஜனநாயகம்!

சமாதானக் கூட்டத்திற்கு
சனம் திரண்டன
ஆயுத வாகனத்தில் ஏற்றப்பட்டு...
900207



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✱ வங்காளத்தேசத்தில் மனிதர்களைத் தின்ற சூறாவளியை நினைத்து நெஞ்சுருகி.......1991

# சூறாவளிச்

வங்காளதேஸத்தின்
வரலாற்றுமுதுகில்
சுட்டுவிட்டுச் சென்ற
சூறாவளியே.....
உன்தீராத பசிக்கு
இரண்டுலட்சம் ஆத்மாக்களா
இரையாகிப் போவது?
திமிங்கிலத்தின் வாய்க்குள்
திரளிக்குஞ்சுகள் போல...

நீ
தெல் அவிவ்களைத்
தேடி அழித்த
'ஸ்கட்டுகள்' அல்ல...
பக்தாத்களைப்
பயங்கொள்ளச் செய்த
''பற்றியட்''டுமல்ல...

நீ
சதாமின் சாதனையோ
யோர்ஜ்புஷ்ஷின் யோசனையோ அல்ல...
உலகை
உருவாக்கியவனின் உற்பத்தி
அதனால்தான்
உரிமையோடு
இலட்சக்கணக்கில்
இழுத்துப் போய் விட்டாய்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்காள மனங்களே...
நாங்களோ
வேட்டுக்குப் பயந்து
விழித்துக் கொண்டிருக்கிறோம்...
நீங்களோ
காற்றுக்குப் பயந்தல்லவா
கனவுகளை விரட்டுகிறீர்கள்!

மானுட விலாசகங்களை
ஆயுதங்களினால்
அழிக்கநினைக்கும்
ஏகாதிபத்தியங்களின்முன்
பரமன் இங்கே
பகடை செய்கிறான்...

எது எப்படிப் போனாலும்
இந்த ராஜியம்
அகதிமுகாம்களைத்தான்
அதிகமாக்குகிறது!

வங்காளதேஸமே!
நீ ஒரு
இதிஹாசச் சுவர்
உன்
முகத்தின் ரேகைகளை
முணுமுணுக்காத
நாவுகள் ஏது?
910519



# சோகங்கள்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய பல்லவிகள்

வெள்ளியொன்றிங்கே
வீணாகக்கழிகிறது........

மாதங்களின் மணிவிளக்கு
நோன்பு போல-
கிழமைகளின் கிரீடமல்லவா
வெள்ளி!

ஜும்மாக்களுக்கிங்கே
ஜுரம்பிடித்துள்ளது....
உற்சாகமில்லாத
உரையாடல்களால் தான்....!

வெள்ளியை இஸ்லாம்
விழாவாக்குவதேன்-
குத்பா அதனுள்
குடியிருப்பதால் தான்!

வட்டியும், களவும்
விபசாரம், விரயம்....
கதீபின் கல்பிலிருந்து
இத்யாதிகள் தானே
இறங்கி வருகின்றன!

இஸ்லாத்தின் முதற்பக்கமே
இதைத்தானே சொல்கிறது....
மீண்டும் அவற்றை
மீட்டித் தொலைப்பதால்-
வெள்ளியொன்றிங்கே
வீணாகக்கழிகிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சியை, ஜிஹாதை
புகழ்பூதத் பத்ரை
கதீப்களிங்கே-
கதைக்கமறுப்பதால்
ஜூம் ஆக்களுக்கிங்கே
ஜுரம் பிடித்துள்ளது!

எங்கள் திருமறை
எதைச் சொல்லவில்லை
கருவுக்குள்ளிருந்து
கல்லறைக்குப் போகும்வரை
வேண்டியவற்றை-
வெட்டித் தருகிறதே...
உணர்ச்சிக்குத்பா
உற்பத்தியாகாததால்
பள்ளிகளெல்லாம்
'பார்க்குகளா.....
காளையர் கூட்டமாய்
கதைத்துக் கழிப்பதால்
பள்ளிகளெல்லாம்
பார்க்குகளாக......

இந்த இதிஹாசத்தின்
கதாநாயகர்கள்யார்
கதீப்கள்தான்
காரண கர்த்தாக்கள்!

வெள்ளியொன்றிங்கே
வீணாக்கக் கழிகிறது.....
ஜூம்மாக்களுக்கிங்கே
ஜுரம்பிடிக்காமலிருக்க
உணர்ச்சிக்குத்பாக்கள்
உற்பத்தியாகட்டும்! 901215



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ எத்தியோப்பிய எழுச்சியின் நாயகன் மீலீஸ் ஹினா விக்காக என்பேனா போட்ட பூமாலை - 1991

# ஒரு சூர்ய நிலவு



எத்தியோப்பிய மண்ணே
நீ-
எழுச்சியின் முகங்களை
இனங்கண்டுகொண்டாய்

சேவலே கூவாத
அடிஸ் அபாபாவை
இனி
அடிக்கடி
வஸந்தத்தென்றல்
வர்ஷித்துக் கொள்ளும்
அடிஸ் அபாபாவே!
உனக்கு அம்மிமித்தி
அருந்ததி பார்த்தவர்கள்
சுதந்தர முதலிரவுகளைமட்டும்
சுட்டிக் காட்டவேயில்லை
அதனால்தான்
உன் குழந்தைப்பிஞ்சுகள்
பட்டினி நெருப்பினால்
உருகிப் போனார்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தியோப்பியத்தேஸத்தின்
இருள் கலைந்தது......
விடியலின் மொட்டு
விளக்காய் எரிந்தது!

மூவாயிரம் அண்டுகள்
முதிர்ச்சிகண்ட
எத்தியோப்பியாவே.....
கால வகுப்பறையில்
உன் தேஸத்தின் குழந்தைகள்
பட்டிணியைத்தானே
பாடமாக்கிக் கொண்டார்கள்!

சனநாயகத்தை
சொப்பனத்திலும் காணாத
சோதேஸமே
உன்ரேகைகளில்
மொட்டுவிட்டுக் கொண்டிருந்த
முனங்கள் வரிகளுக்கு
முற்றுப்புள்ளியை அறிமுகப்படுத்திய
புரட்சித்தாயின்
புதல்வனைத் தெரியுமா?

அடுவாவான்
அற்புதக்கனலே
ஹினாவி....
உன் எழுச்சித்துள்ளல்களின் முன்
எத்தியோப்பியா
வெள்ளைச் சேலைக்கு
விவாகரத்துக் கொடுத்து
புள்ளிச் சேலைக்குள்
புகுந்து கொண்டது.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பத்தாறு வயதில்
புரட்சிக் கீதத்தை
முழங்கியவனே.....
மீலீஸ்
உன்சிந்தனைகளால் தான்
மீட்சி கண்டது தேசம்

சர்வதிகாரத்தின்
ஆட்சி கண்டது நாஸம்!
எழுபத்தி நான்குகளில்
ஹெய்லி செலாய்லியை
கேலி செய்து விட்டு,
அடிஸ் அபாபாவிற்கு
ராணுவ ஜால்ராக்கள்
அம்பி மிதித்த போது....
மீலீஸ் - நீ
மீசையை முறுக்கிக் கொண்டாய்!

பல்கலைக்கழகத்துள்
பாட்லொக் போட்டுவிட்டு
புரட்சிக் கழகத்துள்
புகுந்து கொண்டவனே மீலீஸ்.....
உன்
ஒவ்வொரு தாடிமயிர்களுக்குள்ளும்
ஒழிந்து கொண்டிருப்பது
எத்தியோப்பியாவின்
எழுச்சிக் கீற்றுக்கள்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீலீஸ் ஹினாவியே...
உன்
பாரம் நிறைந்த
துப்பாக்கிளின் துணிச்சலுக்கு முன்
பசியால்
முள்ளந் தண்டுகளோடு
முத்தம் கொடுத்துக் கொண்டிருக்கும்
வயிறுகள்
உவகை மழையினை
உள்வாங்கிக் கொள்ளும்!

அமுதம் சுரக்காத
அன்னையின் மார்புகளைக்
கடித்துக் கடித்து
பற்களை காயப்படுத்துக் கொண்ட
சின்ன பிஞ்சுக்குருத்துகளே..........
உங்கள் அன்னையின் மார்புகள்
இனி
நைல்களாய்
நாளை ஊறும்...

அடுவாவின் அற்புதக் கனலே
மீலீஸ் ஹினாவி....
உன்
எழுச்சித்துள்ளல் களின்முன்
எத்தியோப்பியா
வெள்ளைச் சேலைக்கு விவாகரத்துக் கொடுத்து
புள்ளிச் சேலைக்குள்
புகுந்து கொண்டன... 920425

பொது நூலகம் பதிவு இல: 46 02-10-1948 ஜனசமூக நிலையம் கல்முனை 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னப் பருவங்கள்!

எங்கள் வாழ்வுமஹாத் மாக்களின்
வஸந்தமேனிகள்
இப்போதைய
ரத்தக் குளிப்புகளால்
ரணமாகிப் போயின.....

செங்கல் அடுப்பு
சிரட்டைப் பானை
வெண்மண் அரிசி
வெற்றிலை கறியாய்
விளையாடித்திரிந்த
முன்னனைய நாட்கள்
மூச்சின்றிப் போயின

புன்னங்கொட்டை
பொறுக்கி எடுத்து
தேங்காய் என்று
தெருவில் விற்று
பீங்கான் ஓட்டை
பணமாய் வாங்கி....
சின்னப்பருவத்தின்
சீவனை வளர்த்த
தூரத்து நிகழ்வுகள்
தூக்கிட்டுக் கொண்டன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் வகுப்பின்
பென்சிலை எடுத்து
மண்ணுக்குள் புதைத்து
மகிழ்வுற்ற தினங்கள்
துப்பாக்கி வரவால்
தூக்கிட்டுக் கொண்டன....

விடிவெள்ளி விடைபெற்றலும்
புளியம் விதைகளை
பொறுக்குவது வழமை....
இரவு
விடியலைத் தொட்டவுடன்
வெற்று ரவைகளைப் பொறுக்குகிறான்
என்தம்பி....
880904



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரதேடல்......

பிய்த் தெறியப்பட்ட
ஜட வாழ்க்கையில்
தேடல்களாகிப்போன
இந்த மனசு...

கரிவண்டுகளால்
கற்பழிக்கப்பட்ட
கண்களைப்போல....
நெஞ்சு
தும்மிக் கொண்டிருக்கிறது!

தேடித்தேடி
கண்டுபிடிக்க முடியாமல் போய்விட்ட
சோப்ராஜைப் போல
நிம்மதி.....
சுற்றிவளைத்து
கைது செய்ய வேண்டிய
பூலான் தேவியைப் போல
அமைதி......

ஹிருதயம்
வாழ்க்கையை தேடித்தேடி
சத்தி எடுக்கிறது....
சாராயம் குடித்த வானைப் போல்
புழுதிக்கடியில்
புதைந்துபோய்விட்ட
லெனினின் சிலைகளாய்
இந்தமூச்சுகளின்
சுதந்திரங்களும்
குழிதோண்டி விட்டன...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## - ரணங்கள் -

ரணமும், பிணமுமாய்
ரம்யத்தைத் துப்பிவிட்டு
அவதிப்படுகின்ற
இந்தப் பூமியின் முகம் கூட
குப்புறக்கிடக்கிறது
தேசப்படத்தில்....

நன்றியைத் தொலைத்துவிட்ட
பகுத்தறிவுகளுக்குமுன்
நாய்கள்
உயர்குலமாய் உணர்த்தப்படுகிறது!

வரம்புபோடப்பட்ட
நெற்கதிர்களாகிப் போன
எங்கள் முகங்களே...
இந்தப் பிரளயத்தி னூடே
எரிந்து கொண்டிருக்கும்
மனிதத் தசைகளூடே
எங்கள் ராஜ்யத்தின்
முதுகெலும்புங்கூட
மெதுமெதுவாக
பற்றிக் கொண்டிருக்கிறது!



எங்கள் சிலுவைகளே
பூஜ்யப்பட்டுப் போனபோது
இயேசுக்கள் எப்படி
உயிருடனிருப்பார்கள்
920910



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பு
# தி
# ய
# வே
# த
# ம்

மனிதத்தால் நிரம்பி வழியும்
மினிபஸ்ஸிற்குள்நான்.....

அங்கு
மதவெறி மலடாகி
சமத்துவம் சப்தித்துக் கொள்கிறது

வீதியின் ஓரத்தில்
சாதியின் பெயரைச் சொல்லி
சண்டை பிடித்துக் கொள்ளும்
காசீமும், கண்ணனும்
ஒரேசீட்டில் உட்கார்ந்து
ஒற்றுமை வேதத்தை
ஓதிக் கொண்டிருந்தனர்.....

எட்டாம் சீட்டை
எட்டிப்பார்க்கிறேன்...
பாக்கியத்தின் குழந்தைக்கு
பாலூட்டிக் கொண்டிருக்கிறாள்
பாத்திமா உம்மா!
ஓ.....
ஒரு தேவாரமுகத்திற்கு
திருமறையின் மார்புகள்
திரவியமிடுகிறது!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதவெறிமலடாகி
சமத்துவம் சப்தித்துக் கொள்கிறது.....

கதவுகளுக்குள்ளால்
காற்றைப் பார்க்கிறேன்....
உருவின்றி ஓடித்திரிகிறது!

திமிருடன் நிமிர்ந்து நின்ற
தியாகனின் மூணுமாடிக் கட்டிடம்
பூமியின் மடிகளில் முத்தம் கேட்கிறது...
அது
சுந்தரும் சுலைமானும்
சுட்டுக் கொண்டதில்
பிரசவமானவைகள்......

நெரிசலுக்குள் மாட்டிக்கொண்ட
என்பாதங்களை
எடுக்கப்பார்க்கிறேன்
சித்ரா என்னைப்பார்த்து
சிரித்துக் கொண்டிருக்கிறாள்
அவளல்லவா
என்பாதங்களை
மிதித்துக் கொண்டிருக்கிறாள்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஓம் ...நமசிவாயா...''
என்காதுகளின் ஓரங்களில்
ஒலித்துக் கொண்டிருந்த
தெய்வீக ஓசைமாறி
'அல்லாஹு அக்பர்'
அருமந்தபாங்கோசை
பாகாய் இனிக்கிறது.....

வெளியே கண்களைப் போட்டு
விழித்துப் பார்க்கிறேன்
முஹம்மதின் கடை
முட்டுக்காலில் கிடக்கிறது!
நேற்று
காற்று எனக்கொரு
கதை சொன்னது...
இங்குமோகனும், முஹம்மது
மோதிக் கொண்டதாக....!

ஓடுகின்ற பஸ்ஸிற்குள்
ஒற்றுமையைக் காட்டும்
தொப்பிகளும், பொட்டுகளும்
..................?

910505



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளுக்காதவானமும்.....

இந்த வானமேன்
இன்னும் வெளுக்கவில்லை
நிலவையும், கதிரையும்
நித்திரையாக்கி விட்டு
நிம்மதிக்காக விழித்துக்கிடக்கும்
மனிதா ஹிருதயங்கள்....

மழையும் பெய்யாமல்
வெயிலும் எறிக்காமல்
ஏன்தான் இந்த வானம்
மூசாப்புக்குமுகூர்த்தம் பார்த்து
மூச்சுகளைஎல்லாம்
முடமாக்குதோ?

இங்கேயும்
வானம் அடிக்கடி
பொழிகிறது தான்......
மழையையோ
மனுஷத்துவத்தையோ
சகோதரத்துவத்தையோ
சந்தோஸத்தையோ அல்ல...

பகலும், இரவும்
பாகுபாடின்றி
இருண்டுபோய்க்கிடக்கும்
மேகத்தைப் போலத்தான்.....
மரணக்குஞ்சுகளை
மடிக்குள்வைத்து
தாலாட்டி, தலாட்டி....
இந்தபிரபஞ்ச விளக்குளே
இருட்டிப்போய்விட்டன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோகத்தை சொருகிக் கொண்ட
ஹிருதய பூமியே
கொள்ளிவைக்குமுன்னமே
அஸ்தியைக் கண்டுவிட்ட
உயர்திணைப் பிறப்புகளாக....

உலகம்தானே
உதிரத்தைபிரித்துப் போட்டது
குறுப் குறுப்பாக...
கருவறையில் புண்ணிருக்கையில்
சிசு எப்படி
சிரித்துக் கொண்டு பிறக்கும்...

மௌனமே!
சப்தமிட்டுக்கத்து...
ரணங்களைத்துப்பிய வானம்
ரதங்களைப் பொழியட்டும்!

அழும் குழந்தையை
அன்னார்ந்து பார்த்து
பரிதாபப்படும்
பாட்டியைப் போல
இனி
வானத்துக்கும் இரக்கம் வரும்!
அப்போது
அக்கினிக்குஞ்சுகளைப்
பிரசுவித்துப் போட
வானம் தயாராகும்....
அழும்குழந்தைக்கு
மேலும் அடிவிழுவதைப் போல..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❀ லெபனானில் படுகொலை செய்யப்பட்ட
ஹிஸ்புல்லாஹ் இயக்க தலைவர் சகோதரர்
அப்பாஸ் மூஸவியை எண்ணி என்பேனா அழுகிறது

# மரணித்துப்போன ஈமானிய கருப்பை!

இந்த நூற்றாண்டு
இதிஹாசப் புரட்சியொன்றை
மௌத்தாக்கி விட்டது....
ஈமானை இடுக்கிக் கொண்டு
இஸ்ரேலின் கழுத்தை நசித்த
எங்கள் அப்பாஸ்மூஸவி....
ஷஹீதாக்கப்பட்டபோது
சரித்திரமே மரணித்தது!



இஸ்ரேல்
தாய்ப்பாலுக்குப் பதிலாக
தறுதலைப் பாலையும்.....
உண்டிக்குப் பதிலாக
பாலஸ்தீன உம்மத்துகளின்
உடலையும்
உண்டுவளர்ந்த
தேஸ் மிருகம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாஸ்முஸவி
ஈமானிய கருப்பையின்
இமாலய உற்பத்தி......
சத்தியத்தைமனசிலல்ல
சந்தூக்கிலும் காட்டியவர்
மௌத்தாகாமல் ஷஹீதாகி.....

புரட்சிச் சிற்பியே முஸவி...
இஸ்ரேலியக் குறவர்கள்
பாம்பாட்டிய போது
பாதைக்கு ஏனையா
படையெடுத்து வந்தீர்கள்.....
கோழைத் தனத்தையே
கொள்கையாய் கொண்டஷமீர்
ஒரு சூர்யனையே சுட்டு வீழ்த்தி
உலகத்தை
இருட்டாக்கி விட்டான்....

ஹிஸ்புல்லாஹ் வின் இதயமே.....
மண்ணுக்காக அல்ல
மதத்துக்காக
எங்கள் பரம்பரையையே
இழந்து விட்டீர்களே!
920315



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன விடியல்

எனக்குத் தெரியும்
நீ
அகதிமுகாமுக்குள்
அடைபட்டுக் கிடப்பது....

இனிஷல் தெரியாத
இதயங்கள்
உன்னைமட்டுமல்ல
என்னையுமல்லவா
எதிரியாக்கி விட்டார்கள்

தூங்கிப் போய்க்கிடந்த
துவேஷ கஜானாக்களுக்கு
தூசுதட்டியவர்கள்
நமது தோள்களில்
மாலைகளுக்குப் பதிலாக
மரணத்தை அல்லவா
மாட்டிவிடுகின்றார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னவாழ்க்கை!
அமாவாசைப் பொழுதுகளில்
குழந்தையை
சலங்கழிக்கக் கூட்டிச் செல்வதுபோல்
அடுத்த வீட்டை
அண்ணார்ந்து பார்ப்பதற்கும்
படையல்லவா
பக்கத்தில் தேவைப்படுகிறது

எத்தனைநாளைக்கப்பா
மனசில் மரணவருடலையும்
உடம்பில்
உணர்ச்சிக் கொப்புளங்களையும்
உட்காரவைத்துக் கொண்டு
சூர்ய நேரத்தையும்
நிலவுப் பொழுதாக்கி
சுமை காண்பது?

எழும்புங்கள்!
துப்பாக்கி ஜீவன்களே
உங்கள் வேட்டுகளின் முன்
விழுந்து போவது
எதிரிகள் அல்ல...
இலங்கை மண்ணின்
இளைய திலகங்கள்!

நாளை விடியும்
மக்களுக்கல்ல
மக்களே இல்லாத
சஹாராவிற்கு
900609



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராத்ரீ

வசந்த பாடத்தின்
வகுப்பறை!
நிஸப்தபார்வையின்
நீலவிழி...

கனவுகளெல்லாம்
இங்குதான்
காட்சிக்கு வைக்கப்படுகின்றன!

கனவுகளுக்காக
ராத்திரியை
ரணமாக்குபவர்களுமுண்டு
ராணியாக்குபவர்களுமுண்டு

கடைகளெல்லாம்
கதவடைப்புச் செய்ய
இரவுநிலையங்களெல்லாம்
இதழ்திறக்கின்றன!

கொடுமைகளுக்கு
கோபுரம் கட்டும் நேரம்...
களவும், கற்பழிப்பும்
கைகளை உயர்த்த
இருட்டின் விழிகள்
இமைகளை மூடிக் கொள்ளும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராத்ரீராணிகளின்
ரகஷ்யமுனகல்களின்முன்
காற்றுகூட காயப்படுகிறது
இறுகிய மேனிகளுக்குள்
இசைய முடியாமல்!

இந்த இரவு நாட்டின்
நகரங்களெல்லாம்
நரகெங்களாக.....
புறக் கோட்டையின்
புகையிரதநிலையம் போல...
910509



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ம**
**ழை**
**நா**
**வி**
**ல்**

இந்தாவற்றிலையைச்சப்
சற்று நீரைத்துப்ப
மனிதமேனிகள்
ஈரக்கன்னிகளை
கட்டியணைக்கும்

பள்ளக்கட்டடங்களில்
அமைந்திருக்கும்
நீர் அரங்குகளில்
தவளை இசைக்குழுவினரின்
கச்சேரிகள்
காதைப்பிளக்கும்!

மூலைமுடுக்குகளில்
அனாதைகளாய்க்கிடந்த
குடைக்குமர்களுக்கு
கல்யாணம் நடக்கும்!

சூர்யக்காதலனின்
சுகவரவிற்காய்
புஷ்பப்பெண்டிர்கள்
பிரார்த்தனை புரிவர்!

மேனிமைதானத்தில்
கூதல் உதைபந்தாட்டம்
ஆரம்பமாகும்

ஏழை இல்லங்களின்
ஓலைக் கைதிகள்
காற்றுகாவலாளிகளால்
கைது செய்யப்பட்டதால்
குடிசைமண்டபங்கள்
மகாவலிகளாகும்!
860310



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வ**ஸந்தத்தின்
வாஸல்கதவுகளுக்கு
திறப்புநீ!

சிறைபிடிக்கப்பட்ட
நிஷப்தக்கன்னிகள்
கற்பழிக்கப்பட்டதால்
உன்தேஸத்தில்
சப்த அரசர்களின்
ஆட்சி ஆரம்பம்!

இயற்கைகள்
இதழ்திறக்கும் நேரம்..

**வை**
புரண்டுபடுத்த
புஷ்பங்கள் பூக்க
பட்சிவைரமுத்துக்கள்
**க**
புதுக்கவிதையாக்க....
சந்தோஸ நர்த்தனங்கள்
அகங்களில் அரங்கேறும்!

**றை**
நிம்மதிப் போர்வைக்குள்
நித்திரை செய்த
பாட்டாளி மனசுகள்
மூட்டைகளுக்கு
முதுகுகளை அடகுவைக்க
ஆரம்பமாகும்!

வைகறையே
உன்வரவேற்பைக்கண்டுதான்
கவலைகளுக்கு
கதிரைபோடுகிறோம்....
870805



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைக் கொடிகளே

நீங்கள்மட்டும் தான்
பேதங்களையிங்கு
பெற்றெடுக்கவில்லை!
சாதி, இனம்
சமயம், மொழி
இப்படி
ஏற்றத்தாழ்வுகளெல்லாம்
எங்களிடம்தான்

கொடிகளுக்குக்கூட
கொள்கையிருக்கிறது
இந்த
பகுத்தறிவு மனசுகளிடம்தான்
பாகுபாடுகள்
குன்றகளாய் குடியிருக்கின்றன!

வெள்ளைக் கொடிகளே!
இந்த மனுஷத் துவங்களிடம்
மஞ்சம் அமைத்திருக்கும்
புழுதிபடிந்த
புத்திசாலித் தனங்களின்
கறைகளை நன்றாய்க்
கழுவிக் கொள்ள...

வெள்ளைக் கொடிகளே...
மனுஷமனங்கள்-
உங்களிடம் மட்டும்தான்
மனிதாபிமானத்தை
மதிப்பீடு செய்கின்றன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின்
அகங்களுக்குள்
அடைபட்டுக்கிடக்கும்
துவேஷ ஒட்டடைகளை
துடைத்தெறிய...
வெள்ளைக் கொடிகளே...!

உங்கள்
வெள்ளைச் செயல்கள்
மனிதக்குழந்தைகளுக்கு
மனட்சாட்சியை
கற்றுக் கொடுக்கட்டும்!
900428



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒ ரு வி ண் ண ப் ப ம்

இந்த இரவுகளுக்கு
எங்களுடன்
இரக்கமேயில்லையா?

அப்படியில்லாவிட்டால்
ஏன் இப்படி
விரைவாக விஷயலின்கால்களில்
விழுந்து விடுகின்றன!

இரவின் வரவில் தான்
எங்கள் இதயங்கள்
வாழ்க்கையையே
விரித்துப்பார்க்கின்றன..

பன்னிரெண்டு மணிகள்
பகலென்றால்
இருக்கின்ற மீதியெல்லாம்
இருவுகள்தானே...
அப்படி என்றால்
ஏன் இந்த இரவுகள்
விரைவாக விடிகின்றன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை!
காலம்தன் கடமையை
கவனமாய்ச் செய்கிறது!
ஆனால்
நிம்மதியில்லாத இந்த
நித்திரா விழிகளுக்குத்தான்
அவை அப்படித் தெரிகின்றன.....

நாங்கள் நாளைமுதல்
ஒன்று செய்கின்றோம்...
விடியலின் கரங்களுக்கு
விண்ணப்பம் அனுப்புகிறோம்
கால அகராதியிலிருக்கும்
பகல்பொழுதை
பற்றவைத்துவிடும்படி!
900311



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்போது....

அடாவடிகளக்கு
ஆசிரியுரை எழுதிய
சின்னமுகாம்கள்
தமிழின்
சிரிப்பலைக்கண்டு
வெறியைச்சுமக்கின்றன!

வேட்டுச்சப்தங்களை
விழுங்கி விழுங்கி
மரத்துப்போன
மரங்கள் கூட
மல்லார்ந்து பார்த்து
மகிழ்வைக்காற்றாக்குகின்றன!

தமிழ்
பெருமூச்சு விடுகிறது
நிம்மதியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி
அண்ணார்ந்து பார்க்கும்
வெள்ளைக் கொடிகள்
விரண்டு போய்
சமாதானக்குயில்கள்
சங்கீத இசைக்கின்றன!

எங்களுக்குள்
குடியிருந்த
வேதனை அகதிகள்
வெளியேறி
உவகை
ஊர்வலம் வருகின்றன!
870927



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிந்துபோன அஹிம்ஸை!

அஹிம்ஸைக்குள்ளேயே
ஆயுள் நடத்திய
மஹாத்மாவே!

உங்கள்மேல்
ஈழராஜ்யத்தின்
இதயங்கள்
மதிப்புவைத்துள்ளார்களாம்
சிலைகளை எழுப்பி...

சாத்வீகத்தாலேயே
சரித்திரம்படைத்த
இமயமே...
உங்களை என்விழிகள்
பாவமாய்ப்பார்க்கிறது!
துப்பாக்கிகளையே
தூக்கியிராத
உங்கள் கரத்தின்
ஒற்றைவிரல்
ரவைகள்பட்டு
ரணமாகிப் போனதே
சிலையின் உருவில்..

நீங்கள்
உயிருடன் இல்லாது
ஊமையாய்ப் போனது
இந்தமண்ணுக்குச்செய்த
மாபாக்கியம்..

சனசமூக நிலையம்
பொது நூலகம்
பதிவு இல: CCI-46
02-10-1948



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஹிம்ஸையின் அகராதியே!
இந்தப்பூமியில்
உங்கள் சிலைக்கு முன்னால்தானே
தினமும்
ஆயுதப்பயிற்சி
ஆரம்பமாகிறது!

நீங்கள்
இரத்தமேசிந்தாமல் தானே
சுதந்திரத்தை
சுவீகரித்துக் கொண்டீர்கள்!
இங்கே
விடியலின் வரவிற்காக
உதிரநதிகள் ஊற்றெடுக்கிறதே!

நீங்கள்
அஹிம்ஸையைத் தானே
அறுவடை செய்தீர்கள்!
ஆனால்
உங்கள் சிலைக்கு முன்னால்தானே
ஆயுதத் தொழிற்சாலைக்கு
அடித்தல் நாட்டப்படுகிறது!
900217



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நி ரப ரா தி க ள்

# கு ற் ற வா ளி க ள் !

**ச**த்தியம் பண்ணுங்கள்
சமாதானக்கபோதிக்கு
உதவுவேன் என்று...

நாளை நானும்
முகாமுக்கு முன்னால்
முட்டுக்காலில் நிற்பேன்

குற்றம் புரிபவர்கள்
கோஷமிட்டு குதூகலிக்க
நிரபராதிகளல்லவா
குற்றவாளிகளாக
குறிவைக்கப்படுகின்றனர்!

நேற்று
என் உதிரத்தின்
சொந்தக்காறனையே
காணத்து விட்டேன்...
நானுமல்லவா நாளை
நமது வீதியின்சாக்கடையில்
நாறிப் போய்க்கிடப்பேன்....

ஏனம்மா
மௌனித்து விட்டீர்கள்?
சொல்லுங்கள்
நாளை நானும்
நெஞ்சின் மேல்
துப்பாக்கிகள்
துதிபாடுவதைக்காணுவேன்....
அப்போது
எங்களைக்காப்பது 861208



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ
ஞ
பீ
ச்
சி
ய

**கா**லத்தைத்திறந்து பார்க்கிறேன்
முள்ளுக்கு மேல்
மனிதம் படுக்கிறது..

நேஷத்தோடு
நெருங்கிப் போகிறேன்
தேஸம்ரணம்பட்டு
தெருவில்கிடக்கிறது
காகம் பேண்டுபோன
மலத்தைப் போல!

கா
ல
க்
கு
ஞ்
சு
!

சந்தோஸத்தை சொரகிக் கொண்டு
அருகில்போகிறேன்
பகல்கள் ராவுகளாகி
சூம்பிப்போன மனசுகள்
சோமாலியக்குடிகள்மாதிரி!

ஆசையோடுதொட்டுப்பார்க்கிறேன்
பாவம்!
பொஸ்னியத்திடல்களாகி
ஏகாதிபத்தியம் பீச்சிய
அணுக்குஞ்சுகளால்
உடம்பின்
தோல்களிலெல்லாம்
தொழுநோயாக...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிப்பிடிக்கிறேன்...
முதலாளித்துவம் துப்பிய
வெற்றிலைச் சிவப்பினால்
முகமே தெரியாமல்
போர்த்திக் கிடக்கிறது..

காலத்தைத்திறந்துபார்க்கிறேன்
முள்ளுக்குமேல்
மனிதம் படுக்கிறது....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராளிக் காதலன்

களத்தில் என்னம்மா
காதல் கல்யாணம்

எனக்குள் நீயும்
உனக்குள் நானும்
உட்கார்ந்திருக்கையில்
எதற்கடி காதல்......

கிழிந்துகிடக்கின்ற
இந்த
ராஜ்ய வீதிகளைப்போல
எங்கள் இதயங்களுமல்லவா
அழிந்து கிடக்கிறது
அப்புறமென்னடி காதல்?

காதலீ!
ஒரு நேஷ வரவிற்காக
யாசிக்கிறது உன்விழிகள்...
பலரின் சுகந்த சுற்றுலாவிற்காக
யோசிக்கிறது
நான்போகும் வழிகள்...
களத்தில் என்னம்மா
காதல் கல்யாணம்....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் கண்களுக்குள் தெரிவதை
ஆனந்த நீரென்று
நினைக்கவேயில்லை.....
உணர்ச்சியின் பாலென்றல்லவா
விளங்கிக் கொள்கிறேன்

கால் நூற்றாண்டாய்
காவலில் கிடக்க
நெல்சன் மண்டேலாவிற்குத்தான்
நேரமிருக்கிறதா?
இல்லை...
நீயும்நாளை வின்னிதான்!

அடிகாதலீ!
நான் இறக்கமாட்டேன்....
கற்பழிக்கப்பட்ட
என்தேஸத்திலிருந்து
நாளை வீரத்தின் விதைகள் விழும்!
அப்போது வருவேன்
அதுவரை.....
900513



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலா உடைந்த தேசியம்!

செத்துப்போன
தேசீயத்துக்குமுன்னால்
நடந்து போகிறேன்...

மனுஷ பூதங்களால்
விழுங்கப்பட்ட
ஒற்றுமைப்பிஞ்சுகளை நினைத்து
நேற்றிரவு
நெஞ்சு துண்டுதுண்டாகியது!

காயத்திலிருந்து வழியும்
சீழ் துளிகளைப்போல்
மனசு
சொட்டுச் சொட்டாக
வேதனைப்படுகிறது...

நடந்துபோகிறேன்
தொலைந்துபோன
தேசீயத்தை
தேடி....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணின் முதுகிலே
வீடுகட்டும் விஞ்ஞானம்
விலாஎலும்பு முறிக்கப்பட்ட
எங்கள் தேசீயத்திற்கு
ஒத்தடம் போடாதா?



ரம்யமாயிருக்கிறது
கீதையையும், குர்ஆனையும்
தூக்கிக்கொண்டு
கைகோர்த்துத்திரிந்த
கடந்த சுவடுகளை எண்ணி...

கலிமாவும் தேவாரமும்
கலகப்பட்டபோது
பூமியின் முதுகில்
புழுதி படிந்து கொண்டன
புற்கள் முளைக்காமல்...

நரகங்களாகிப்போன
நகரங்கள்...
போர்த் தெருக் களாகிப்போன
ஹிருதயங்கள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகித்துப்போன நாவுகள்
கங்கையைத் தேடியபோது
அதுவே பாலையான மாதிரி..
சமத்துவத்திற்காக
யாத்திரை போகவே
மனசில்லாமல்
யாசகம் தேடுகிறது...

இந்த தேசியத்தைதொலைத்த
பூமியின்முகம்
சிரித்துத் தான் என்னபயன்?
மானுடங்களெல்லாம்
அழுது கொண்டிருக்க....
921231



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை

கடவுள் எழுதிய
கவிதை
இலக்கிய மில்லாவிட்டாடும்
இறுக்கமானது....

பூமி பொய்யானது
பாருங்கள்
குழந்தை
பிறந்த உடனேயே
பீறிட்டு அழுகிறது
இல்லாவிட்டால்
சிரித்துக் கொண்டால்லவா
விழிகளைச்
சிமிட்டிப்பார்க்கும்!
கருவறையிலேயே
காலம் கடத்தியிருக்கலாம்
உலகுக்கு வந்து ஏன்
ஓடித்திரிகிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீஷ்டூரத்தனதிதை
நிழலிலும் காணாத
இந்த பிஞ்சு முகம்
கருவறையில் மட்டும் தான்
தர்மத்தை
தானதாக்கிக் கொண்டது

மொட்டை விட்டு
விழித்துப் பார்க்கும்
இந்தப் பூ
பூமியில் பார்ப்பதெல்லாம்
பொறுக்கித் தனத்தைத் தான்!
910428



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உருண்டை பூமி
இனிச்சுற்றமுடியாது
மின்சாரம் இல்லாமல்!

மனுஷ சுகத்திற்கு
மண் எப்படி
அவசியமாய் அந்தஸ்த்தாகிறதோ
இதுவும் இப்படித்தான்
இமயமாகிறது...

பொது நூலகம்
பதிவு இல:
AM CCI 46
02-10-1948

**மி**

**ன்**

**சா**

**ர**

**ம்**

கம்யூனிஸத்தை
பூமியின் கால்களில்
கட்டி விட்ட
கால் மாக்ஸைப்போல்
உலகத்தின் தலையில்
மின்சாரத்தை
உட்கார வைத்துவிட்டான்

வாழ்க்கைக்கு வரலாறு இல்லை
வனப்பு உண்டு...

மின்சாரத்திற்கு
சப்தமில்லை - சரித்திரமுண்டு

மின்சாரம்!
ஒவ்வொரு நரம்புகளிலும்
வாழ்ந்து கொண்டிருக்கிறது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுவின்பைபிளைப் போல்
இறைவனின் குர்ஆனைப் போல்
கண்ணனின் கீதையைப் போல்....
மின்சாரம்
உலகின் இன்னொரு வேதம்!

இந்த உருண்டைபூமி
இனிச் சுற்றமுடியாது
மின்சாரம் இல்லாமல்!

900210



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ கேஷ்மிர்ப்பூமியின் தியாகக்
கருப்பையின் நெஞ்சங்களைபார்த்து
கசிந்துருகி......

# ஹஜ்ஜூத் தெருக்களில் கேஷ்மீர் முகங்கள்

ஒரு தியாகபிரபஞ்சத்தின்
தீபம்..
இப்றாஹீம் எனும்
இஸ்லாமிய எரிமலை
வெடித்து
தியாகப்பிளம்புகளாக
ஊற்றெடுக்கின்றன
இந்த உம்மத்துகளின்
உள்ளங்களுக்குள்...

சிருஷ்டியாளனின்
சிந்தனைகளை
உதடுகளில் கூட உட்காரவைக்காத
உள்ளங்களுக்கிடையில்
இந்த நிலவு
மகனின் மேனியையல்லவா
மெழுகுதிரியாக்கியது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்றாஹீம் எனும்
இமயச் சாரலில் இருந்து வழிந்த
தியாகத் தண்ணீர்தான்
புத்ர முகங்களையும்
புனிதப்படுத்துகிறது...

அல்லாஹ்வுக்காய் உருக நினைத்த
இப்றாஹீம் மெழுகுபோல்
தீனுக்காய் தியாகித்துக் கொள்ளும்
கேஷ்மீர் உள்ளங்கள்....

துப்பாக்கிகளின் துப்பல்களுக்குள்
இதயத்தை எல்லாம்
ஈரமாக்கிக் கொண்டு..
'அல்லாஹு அக்பர்' எனும்
அருமந்த மருந்தினை
உள்ளங்களில்
காரமாக்கிக் கொண்டு
கேஷ்மீர்த் தாயின்
போராளிக் குழந்தைகள்...

சுதந்திர சுகங்களுக்காக
விழித்துக் கொண்டு
கைதாகிப் போன
ஊமைநிரபராதிகளின் விடுதலைக்காக
சோகப்புத்தகங்களை
நெஞ்சங்களில் சுமந்து கொண்டு
உயிர்களைக்கூட
தேஸத்தின் புலர்வுக்காய்
உயில் எழுதிவிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேஷ்மீர் மண்ணின்
எங்கள் உடன்பிறப்புகளை
எண்ணிப்பார்க்கையில்...
ஹஜ்ஜுத்திரு நாளில்
இந்தக் கல்புகள்
கசிந்துருகிப் போகிறது...

துல்ஹஜ் தெருக்களில்
தூங்க மறுக்கின்ற
இப்றாஹீம் எனும்
தியாக மனுஷத்தின்முன்
கேஷ்மீர் உம்மத்கள் மட்டுமல்ல
ஆப்கானாய்....
பாலஸ்தீனாய்...
ஓ..கலிமாவின் எழுச்சிக்காய்
கனாக்காணும்
மனங்களெல்லாம்
வந்து விரிகின்றன
கரைக்கு வந்து போகும்
கடல் நுரையைப் போல்...
900607



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞர்கள்

**கா**லம் எங்களைக்
கௌரவப்படுத்துகிறது...
வரலாறு எங்களுக்கு
வாழ்த்தோல் வாசிக்கிறது!

போராளிகளின் இலட்சியங்களோ
துப்பாக்கிகளுக்குள்
தூங்கிக் கொண்டிருக்கலாம்
எங்களிடமோ
பேனாக்கள் மட்டும்தான்
பெறுமதிவாய்ந்தவை!

எங்கள் கற்பனைகளை
பேனாக்கள்தானே - மொழி
பெயர்த்துத்தருகின்றன
அதனால்
ஆயுதங்களைவிட
அந்தஸ்த்து அதிகம்

ஆயுதங்களால்
கழுத்துகளைத்தான்
வேறாக்கமுடியும்
எழுத்துகளை.......?

துப்பாக்கிகளால்
மரணவரிகளை
மனப்பாடஞ் சொல்லிக் கொடுக்கலாம்
புத்தி சொல்லிப் புனிதமனிதனாய்
புனிதப்படுத்த முடியாதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பேனாக்களின்
உரிமையாளர்கள்
என்பதனால் தான்
காலம் எங்களுக்கு
கைகொடுக்கிறது....
கௌரவிக்கிறது!

பொய்யர்களாய் எங்களுக்கு
பெயர்சூட்டுவது
முகவரியில்லாமல்
முடங்கல் போடுவதுபோல

அம்புலியைப்பார்த்து
அழகென்கிறோம்
இதை பொய்யர்களென்றால்
எப்படி
பொருந்திக் கொள்வது
நாங்கள் கவிஞர்கள்
காலம் எங்களை
கௌரவப்படுத்துகிறது
வரலாறு எங்களுக்கு
வாழ்த்தோலை வாசிக்கிறது!
890101

பொது நூலகம்
பதிவு இல: AM CC 46
02-10-1948



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுமை

இளமைக்கு
இறைவன்போட்ட
முள்வேலி!

ஆசைநர்த்தனங்கள்
அரங்கேறிமுடிந்த
கலாமண்டபம்!

நரைக்குழந்தைகள்
நடக்கத் தொடங்குவதால்
வழுக்கை
வாழ்க்கையைத் தொடரும்

கைகலப்பு, சண்டை
காதல், களியாட்டம்
இத்யாதிகளெல்லாம்
இளைப்பாறி
மரணத்தின் நினைவு
மஞ்சம் அமைக்கும்

வாழ்க்கை நூலுக்கு
வழங்கப்பட்ட
முடிவுரை!
அதனால்தான்
சுவையாயிருக்கிறது.



கிடுகு என்ற
கிரீடம் சூட்டி
காலம்
கௌரவப்படுத்துகிறது!
901125

02- 10- 1948



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சனசமூக நிலையம்
பொது நூலகம்
பதிவு இல:
AM: CC: 46
02- 10- 1948
பாண்டிருப்பு 01, கல்முனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரீ.எல்.ஜவ்பர்கான்



சத்திய தரிசனம் பிரசவமாகும் நேரம் அதுவே கவிதை; நஞ்சுக் கொடியை கழுத்தில் சுற்றியவராக அன்பன் ஜவ்பர்கான் 1980களில் கீழ்வானில் முளையிட்டவர் - அன்று நான்குனிந்து பார்த்தேன்! 90 களில் அண்ணார்ந்து பார்க்க வைத்த மஹாத்மா! சங்கு புஷ் பம்...தன்ஆ தரிசனங்களின் தரு ணங்களை கவிதைச்சிலுவையில் அறைந்துள்ளார்... கவிஞரின் எழுதுகோலிலிருந்து இரத் தம் சொட்டுகிறது... கனவுகள்...கற்பனைகள் மட்டு மல்ல......உணர்வுகளையும், உயிர்களையும்....'பொடி' செய்து எழுதக் கற்றிருக்கிறார். அவர் எழுத்துக்களின் சத்தி யத்தில் நான் கண்மூடி, மெய்சிலிர்த்து, கண்கலங்கி.....புஷ் பமாகிப் போனேன்.....! என்தேடல் என்சிரிப்பு எனக்கே சொந்தம்! எழுத்து இறிதத்தேடல்களின் யோகம்! தபஸ்! இந்தயோகத்தின் சுவைஞர்களே; வெறியர்களே கலைஞர் கள்....சமுதாயவயலின் சொல்லோர் உழவர்கள்... சிலு வைகாவிகள்...ஜவ்பர்கான்...:அவர் எண்ணங்களில்.... எழுத்துக்களில் நானும் சிலுவையில்.....பொறியில் வெட் டுண்ட பல்லியின் வாலாக இரத்தம் சொட்டுகிறது..... ஆஹா! என்ன சுகம் அந்த சுகம்....

எஸ்.எல்.எம்.ஹனீபா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Offset by : TRISTAR, DEHIWALA.